1993 அக்டோபர் 26] [டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்]

அதேபோல, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட வளாகத்தி லுள்ள காடம்பாறை மின் நிலையம் 1990-ஆம் ஆண்டு தீவிபத்திற்கு உட்பட்டபொழுது எந்த அரசு இந்த மாநிலத்தை ஆண்டு கொண்டிருந்தது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த சேதம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில்தான் சரி செய்யப்பட்டது என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, 1992—ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பருவ மழையின்போது தண்ணீரில் மூழ்கிப்போன சேர்வலாறு மின் உற்பத்தி நிலையம் முழுமையாக 9-8-1993, அதாவது 8 மாதங்களுக்குள்ளாக முடிக்கப்பட்டு சீரமைக்கப்பட்டது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

தூத்துக்குடி அனல் மின் நிலையமும், மேட்டூர் அனல் மின் நிலையமும் உற்பத்தித் திறனுக்காக பரிசைப் பெற தகுதி பெற்றுள்ளதையும் பாராட்ட வேண்டும். மின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காக மேற்கொள்ள இருக்கும் கூடுதல் திட்டங்கள் அனைத்தும் பாராட்டுவதற்குரியன.

இப்படி பாராட்டுதல்களைப் பெறுகின்ற நேரத்தில், தமிழ்நாட்டில் பல்வேறு மத்திய அரசு மின் திட்டங்களை செயலாக்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதை குறித்து நம்முடைய அரசு பெரிதும் கவலை கொண்டுள்ளது.

மக்களுடைய வரிப் பணத்தை வீணாக்குகிறார்கள் என்று சொன்னவர்கள், இங்கே, தமிழ்நாட்டிலே மத்திய அரசினுடைய மின் திட்டங்களை செயலாக்குவதில் காலதாமதம் ஏற்படுவதை மத்திய அரசுக்குச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டவர்கள் என்பதை நான் இந்த மன்றத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, தென்னக எரிவாயு மின்தொகுப்புத் திட்டம் விரைவில் முடிக்கப்பட வேண்டுமானால், தென்னக மாநிலங்கள் ஒன்று சேர்ந்து நிதி பங்கேற்பு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கருத்தை ஏற்று, இதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று இந்த மன்றத்தின் வாயிலாக வற்புறுத்துகிறேன். இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையிலே மின்சக்தி எந்தத் தொழிலுக்கும் பயன்படக்கூடிய ஒரு எரிசக்தி ஆதாரம் என்பதோடுகூட இது ஏனைய எரிசக்தியை காட்டிலும் மிகச் சிறந்த வணிக எரிசக்தி என்று கூறியிருக்கிறார்கள். இது மறுக்கமுடியாத

உண்மைதான். மாநிலத்தின் வளர்ச்சிக்கு இது மிகவும் அவசியமான இடுபொருள் என்று கூறி இருக்கிறார்கள். அதுவும் மறுக்க முடியாத உண்மைதான். விவசாயப் பணிகளை அதிக அளவில் இயந்திர மயமாக்குதல் மூலை முடுக்குகளிலும் உள்ள மக்களுக்கும் இதன் பயன்களை நீட்டித்தல் ஆகியவற்றின் காரணமாக மின் சக்தியின் பயன்பாடு அதிக அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பதும் மறுக்க முடியாத உண்மைதான். மிகச் சிறந்த முறையிலும், சிக்கனமாகவும் இம்மாநிலத்தின் மின் உற்பத்தி, மின் அனுப்புகை, மின் பங்கீடு ஆகிய பணிகளை ஒருங்கிணைந்த முறையில் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதும் மறுக்க முடியாத உண்மைதான் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைப் பேரவைக்கு நல்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, எனது சில கருத்துக்களை இந்த மாமன்றத்திற்கு நான் சமர்ப்பிக்கிறேன்.

பிற்பகல் 12-30

(மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை)

தேவைக்கு மிகுதியான இடுபொருள் ஒன்றை உற்பத்தி செய்கிறபோது, சில விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. இதிலே முக்கியமாக வருவது உற்பத்தி; அடுத்து உற்பத்தி செய்த பொருளை பங்கீடு செய்வது; அப்படி பங்கீடு செய்யும்போது ஏற்படுகிற இழப்பைச் சரிக்கட்டுவது என்பது பற்றி எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய உரையில் இருக்கிறது. இவற்றோடு சேர்த்து, இப்படி ஒரு இடுபொருளை உற்பத்தி செய்யும்போது அதை எவ்வாறு மிச்சப்படுத்த வேண்டுமென்பது பற்றிய கருத்து எதுவும் அதில் இல்லை. ஆகவே மின் வாரியத்திற்கு என்னுடைய கருத்தாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு பொருளை எவ்வளவுதான் உற்பத்தி செய்தாலும், அந்தப் பொருளை மிச்சப்படுத்துகின்ற ஒரு முறையையும் நாம் கடைப்பிடிக்க வேண்டும். மின்சாரத்தை மிச்சப்படுத்தல் என்பது மிக முக்கியமான ஒன்றாகும். இதிலே முதலாவதாக நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் இதை உபயோகிப்பவர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்பட வழிவகைளைச் செய்ய வேண்டும். மின்சாரத்தைக் குறைந்த அளவுக்கு எடுத்துக்கொண்டு, மிச்சப்படுத்தும் கருவிகளை நாம் உபயோகப்படுத்த வேண்டும். இதுபோன்ற கருவிகளைக் கண்டுப்பிடித்தவர்களைக்கூட நாம் பாராட்ட வேண்டும். ஊக்குவிக்க வேண்டும். உதாரணத்திற்கு குழல் விளக்கு பற்றிய ஒரு கண்டுபிடிப்பை இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இதை நான் கூறும்போது, பல பேருக்கு இது அதிசயமாகக்கூட இருக்கலாம். ஆனால் உண்மை இன்றைக்கு ஒரு நிறுவனம் ப்யூஸ் போன டியூப் லைட்டுகள்